**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

**K.சந்திரசேகரன்**
**தலைவர்**

**R.சந்திரசேகரன்.**
**பொதுச்செயலாளர்**

**சுற்றறிக்கை / 01-2017** **25-01-2017**

அன்புடையீர்,

வணக்கம். புத்தாண்டு மற்றும் பொங்கல் நன்னாட்களை சிறப்புடன் கொண்டாடியிருப்பீர்கள் என நம்புகின்றோம்.

கடந்த 26-12-2016 சுற்றறிக்கையில் நாம் தெரிவித்திருந்தபடி மின்சாரத் தொழிலாளர்களின் தேங்கி கிடக்கும் பிரச்சனைகள் மீது ஒவ்வொன்றாக உத்திரவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

1. மின்பாதை ஆய்வாளர் பதவி உயர்வுக்கு மஸ்தூர் பணிக்காலத்தை அனுபவ காலமாக எடுத்துக்கொள்ளலாம் என்று 27-12-2016-ல் உத்திரவிடப்பட்டுள்ளது.
2. வாரியத்தின் 60 ஆண்டுகால வரலாற்றில் முதல் முறையாக ஆவண உதவியாளர் என்ற பொறுப்புகள் உருவாக்கப்பட்டு 43 ஆவண எழுத்தருக்கு பதவி உயர்வு 27-12-2016-ல் வழங்கப்பட்டது. மேலும் 4 பேருக்கு இன்னும் சில தினங்களில் ஆவண உதவியாளர் பதவி உயர்வு வழங்கப்படவுள்ளது. பதவி உயர்வினால் இடமாற்றமோ, வேலை மாற்றமோ இருக்காது. சம்பள உயர்வு மட்டும் இருக்கும். விசேஷம் தானே!
3. வாரிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு விருப்பமாறுதல் வழங்குவதற்கான வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன. கூடுமானவரை இவைகளை நிர்வாகம் பின்பற்றுமெனில் தவறான விமர்சனங்களை தவிர்க்கும் வாய்ப்பு ஏற்படும்.
4. 08-01-2017 அன்று நமது சங்கத்தின் உயர்மட்டக்குழு கூட்டம் நடைபெற்றது. பெரும்பாலும் சங்கத்தின் உள்கட்டமைப்பு பிரச்சனைகள் பேசப்பட்டு சுமுக முடிவுகள் எடுக்கப்பட்டது.
5. நவம்பர்-2015-ல் அறிமுகப்படுத்தப்பட்ட மத்திய அரசின் உதய் திட்டத்தில் 21-வது மாநிலமாக தமிழக அரசு 09-01-2017-ல் இணைந்தது. இதற்கான ஒப்பந்தத்தில் டில்லியில் மத்திய மின்துறை அமைச்சர் மாண்புமிகு பியூஸ் கோயல் மற்றும் தமிழக மின்துறை அமைச்சர் மாண்புமிகு P.தங்கமணி ஆகியோர் முன்னிலையில் கையெழுத்தானது.

   1. 24 மணி நேர தடையில்லா மின்சாரம், 2. நலிவடைந்த மின்சார வாரியங்கள் சீரமைப்பு, 3 மூன்று மாதத்திற்கொருமுறை மின்கட்டண மாற்றம், 4. அனைத்து மின் இணைப்புகளுக்கும் மீட்டர், 5. ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் மூலம் மின்கம்பங்கள், புதைவடங்கள், ட்ரான்ஸ்பார்மர் திறன் அதிகரிப்பு, 6. மின்விநியோகத்தில் கணினி, 7.மின் இழப்பை குறைத்தல், 8.மின்திருட்டு கண்டுபிடிப்பு சிறப்பு திட்டம். 9. மின்வாரியத்தை கடன் சுமையிலிருந்து மீட்பது முதலிய சிறப்பு அம்சங்களை இத்திட்டம் கொண்டதாகக் கூறப்படுகிறது.
6. ஆனால் 3 மாதத்திற்கொருமுறை மின்கட்டண மாற்றம், விவாசாய மின்சாரத்திற்கு மீட்டர், மின்சார வாரியம் முழுவதையும் தனியார் மயமாக்குவதை தமிழக அரசு ஏற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிகிறது.
7. 21.1.2017 அன்று “ தேனியில் ” 97 ஆண்டுகள் பழைமையான, பாரம்பரியம் மிக்க, அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் பொதுக்குழு மற்றும் புதிய நிர்வாகிகள் பாராட்டுக்கூட்டத்தில் நமது பொதுச்செயலாளர் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார். மின்சாரத் தொழிலாளர்கள் இன்று பெற்றுவரும் பல்வேறு சலுகைகள் ஊதிய உயர்வு, அகவிலைப்படி, சரண்விடுப்பு, தேர்வுநிலை, சிறப்புநிலை, விடுப்புகள், வீடு, கல்வி, திருமணம், வாகனம் முதலியவற்றுக்கான முன்பணங்கள், ஓய்வூதியம், மருத்துவ சலுகை முதலிய பல்வேறு சலுகைகளை நாம் பெறுவதற்கு அரசு ஊழியர்கள் அவ்வப்போது எடுத்துவரும் ஒன்றுபட்ட நடவடிக்கைகள்தான் காரணம் என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை. அரசு ஊழியர்களின் பணிநிலைமைகள் மின்சாரவாரிய ஊழியர்களுக்கும் பொருந்தும் என்ற கொள்கையை உருவாக்கியது நமது புத்திசாலித்தனம் அல்லவா! எனவே நாம் பெறும் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக நிற்கும் அரசு அலுவலர் ஒன்றியத்திற்கு நன்றி தெரிவிக்கவும், 7-வது ஊதியக்குழு அமுலாக்கம், 1.4.2003-க்குப் பிறகு பணியில் சேர்ந்த அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியம் முதலிய கோரிக்கைகளில் அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளை நேரிடையாக அறிந்து வரவும், இந்தக் கூட்டத்தில் நாம் கலந்து கொண்டோம். மேற்கண்ட 2 கோரிக்கைகளில்

அவர்கள் பெறும் வெற்றியே மின்வாரியத் தொழிலாளர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் என்பதை நாம் அறிவோம்.

8. அரசு அலுவலர் ஒன்றியக்கூட்டத்திற்கு செல்லும் வாய்ப்பினை பயன் படுத்தி, தேனியில் நமது சங்கத்தின் சிறப்புப் பொது உறுப்பினர் கூட்டம், திரு.S.மகாலிங்கம், இணைச்செயலாளர் அவர்களின் ஏற்பாட்டின் பேரில் 21.1.2017 அன்று மாலை 5.30 மணியளவில் நடைபெற்றது. தேனி, மதுரை, பெருநகர், விருதுநகர் முதலிய வட்டங்களிலிருந்து கணிசமான உறுப்பினர்களும், பொறுப்பாளர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். சங்கத்தின் பன்னாட்டுத் தொடர்பு செயலாளர் திரு.B.தியாகராஜன், மதுரை மண்டலச்செயலாளர் திரு.அபுத்தாயர், செய்திமடல் துணை ஆசிரியர் திரு.பால்ராஜ் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

9. தமிழகத்தில் ஜல்லிக்கட்டு விளையாட்டிற்கான தடையை நீக்கக்கோரி 17.1.2017 முதல் மாநிலம் முழுமையும் போராட்டங்கள் நடைபெற்றாலும், ஆறு நாட்களுக்கு மேல் தலைநகராம் சென்னையில் தன்னெழுச்சியாகக் கூடிய லட்சக்கணக்கான, சுயகட்டுப்பாடுகளைக் கொண்ட இளைஞர் கூட்டம் உலகையே திரும்பிப்பார்க்க வைத்தது என்றால் மிகையாகாது. 2015 மற்றும் 2016-ம் ஆண்டுகளில் நடைபெற முடியாத, தமிழர்களின் பண்பாட்டுடன் கூடிய, பாரம்பரியமான வீரவிளையாட்டு, இந்திய விலங்கின தடைச்சட்டம் திருத்தம் பெற்று, அவசர சட்டம் பிறப்பிக்கப்பட்டு, 22.1.2017-ல் வாடிவாசலில் காளைகள் துள்ளிவரும் என தமிழக முதல்வரால் அறிவிக்கப்படும் நிலையை ஏற்படுத்தியது தமிழ் இளைஞர்களின், தமிழச்சிகளின் எழுச்சியால் வந்தது அல்லவா? ஆனால் கிடைத்த வெற்றியை சுவைக்க முடியாமல் 23.1.2017 அன்று போராட்டம் சோகத்தில் முடிந்ததை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லையே. ஒவ்வொரு நாளும், அனுபவம் நமக்குப் பாடங்களைக் கற்றுத் தருகிறதே. எவ்வளவு தான் பெரிய கூட்டம், வலிமை எல்லாம் இருந்தாலும் “தலைமை” என்று இல்லாதது போராட்டத்தை முடிக்க வேண்டிய, முக்கியமான கட்டத்தை நிர்ணயிக்க முடியாமல் போய்விட்டதே. எவ்வளவு பெரிய குறை! போராட்டத்தினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நமது ஆறுதலை தெரிவித்துக்கொள்கிறோம். நடைபெற்றதை நாம் பாடமாக எடுத்துக் கொள்வோம். கவலைகளை மறப்போம். கண்ணீரைத் துடைப்போம். நமது உணர்வுகளை உரமாக்குவோம். எதிர்காலத்தில் எச்சரிக்கையுடன் செயல் படுவோம்.

10. 23.1.2017 அன்று வாரியக் கூட்டம் கோட்டையில் நடைபெற்றதாகவும், களப்பிரிவு தொழிலாளர்களின் பதவி உயர்வினை சீர்படுத்திட நிர்வாகமும், தொழிற் சங்கங்களும் இணைந்து கொடுத்த முன்மொழிவிற்கு வாரியக்கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாகவும் அறிகிறோம். விரைவில் 12(3) ஒப்பந்தம் ஏற்படும் என நம்புகிறோம்.

தோழமையுள்ள

பொதுச்செயலாளர்.

**குறிப்பு : -**
**2017-ம் ஆண்டிற்கான**
**உறுப்பினர்**
**சந்தா வசூலித்திடும்**
**பணியினை**
**உடனடியாகத் துவக்கிடுமாறு**
**வேண்டுகிறோம்**

பெறுநர்.
கிளைச்செயலாளர்கள்,
கோட்டச்செயலாளர்கள்,
வட்டச்செயலாளர்கள்,
வட்டத்தலைவர்கள்,
மண்டலச்செயலாளர்கள், மற்றும்
மத்திய சங்கப்பொறுப்பாளர்கள்.
நகல் : செய்தி மடல்.